# இயேசு யார்?

பாடம் - 8

## சுவிசேஷமும், விசுவாசியும்

**சென்ற** பாடங்களில் இயேசுவை ஏற்றுக்கொண்டு, பாவ அறிக்கை செய்து மனந்திரும்புகிறவன் ஞானஸ்நானம் என்ற நீதியை நிறைவேற்றிட வேண்டுமென்று கற்றுக்கொண்டோம். ஞானஸ்நானம் பெற்று விசுவாசத்துடன் வேண்டுதல் செய்கிற யாவரும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டு அற்புதமாக வாழலாம் என்று அறிந்தோம். இந்த அனுபவத்தையும், நல்வழியையும் அறிந்துகொண்ட கிறிஸ்தவன், இதனைப் பிறருக்குச் சொல்லக் கடமைப்பட்டவனாவான். இதுவே சுவிசேஷம் அறிவித்தலாகும்.

**கிறிஸ்தவர்கள் மட்டும்** *மதப்பிரச்சாரம் என்று மற்றவர்கள் கூறுகிற* **இந்த சுவிசேஷம் அறிவிக்கும் பணியைச் செய்வது ஏன்?**

இயேசு தமது சீஷர்களுக்குக் கொடுத்த இறுதியானதும், பெரிய கட்டளை எனப்படுவதும் "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்பதாகும். (மத் 28.19.20 ) மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் இயேசுவின் நாமத்தினால் பிரசங்கிக்கப்பட வேண்டும் (லூாக் 24.27). இந்தக் கட்டளையை நிறைவேற்றவே இயேசுவின் நற்செய்தியாகிய சுவிஷேசம் உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களால் பிரசங்கிக்கப்படுகிறது.

இந்தக் கட்டளையினால்தான் இன்று காலங்காலமாக விக்கிரக ஆராதனையில் மூழ்கிக்கிடந்த நமக்கு, வேறு தேசங்களிலிருந்து சுவிசேஷத்தின் போரொளி கிடைத்துள்ளது. **ஒளியினை உலகுக்கு வழங்கும்** இந்தப்பணி ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உரியது. இந்தப் பணியைப் பலப்படுத்த இயேசு தமது பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை விசுவாசிகளுக்கு அளித்துள்ளார்.

**இயேசுவின் இந்தக் கட்டளையை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.**

ரயில் தண்டவாளங்களுக்கிடையே வளர்ந்துள்ள புல்லை, ரயில் வரும் நேரத்தில் மேயந்துகொண்டிருக்கும் ஆட்டுக்குட்டியைக் காண்கிறீர்கள். அது உங்களுடையதாயிராவிட்டாலும், அதைத் துரத்திவிட முயலுவீர்கள் அல்லவா? நீங்கள் அதைத் துரத்தியும் அது சற்றுத்தூரம் சென்று மீண்டும் அதேபோல் புல் மேய்ந்தால், நிச்சயமாகவே ரயிலில் அடிபட்டுவிடும். அதேபோல ***மரணமென்ற ரயில்*** அழிக்கும்படியாக வந்துகொண்டிருக்கும்போது, அதை உணராமல் **பாவப்புல்வெளியில் மேய்ந்துகொண்டிருக்கும் திரள் கூட்டமான மக்களைக்கண்டும் ஒரு விசுவாசி அக்கரையில்லாமல் சென்றுவிட முடியாது.** இயேசுவின் வருகையின் நாளான நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களெல்லாம் பாவத்தின் பலனை அடைந்து அழிந்துபோவார்கள் என்பதை அறிந்தும் நாம் சும்மாயிருப்பது நியாயமல்ல அல்லவா. எனவே நம்மால் முடிந்தவரை பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும். தேவனுடைய நியாயத்தீர்ப்பைக்குறித்தும் மக்களுக்கு எச்சரிக்க வேண்டும்.

கேட்பவர்கள் தப்பிக்கொள்வார்கள். அசட்டை செய்கிறவர்களும், எதிர்த்து நிற்கிறவர்களும் தங்கள் பாவத்தின் பலனை அடைந்துவிட்டுப்போகட்டும். தூரத்தில் வரும் ரயில் தன்னை அழித்துவிடும் என்பதை உணர்ந்துவிட்டால், ஆட்டுக்குட்டி தப்பிவிடும். அதுபோல தன்னை நோக்கி ஒவ்வொரு நாளும் நெருங்கி வருகின்ற மரணமானது தனது கல்வி, செல்வம், திறமைகள் அனைத்தையும் ஒருநாள் முடிவிற்குக்கொண்டுவந்து, அதன்பின் தான் தனது பாவங்களின் பலனை அனுபவிக்க நேரிடும் என்ற சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அதற்குத் தப்பும் வழியினைத் தெரிந்துகொள்வார்கள். தேவனுடைய கிருபையால் இவற்றை அறிந்துகொண்ட நாம், அழிந்துபோகும் இந்த **ஆத்துமாக்களின்மேல் அன்புகொண்டு, சத்தியத்தை அவர்களுக்குச் சொல்லவேண்டும் என்பதுதான் தேவனுடைய கட்டளை.**

**இந்தியாவிற்குச் சுவிசேஷம்** :- இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த அவருடைய 12 சீஷர்களும் உலகின் பல இடங்களுக்கும் சென்று இயேசுவின் நற்செய்தியை சுமார் 4000 ஆரம்பகால விசுவாசிகளின் உதவியுடன் செய்து, அதை எதிர்த்தவர்களால் ரத்தச் சாட்சியாக மரித்தனர். இந்தப் பன்னிருவரில் ஒருவராகிய புனித தோமா என்பவர் (St.Thomas) இயேசு பரமேறிய 40 வருடத்திற்குள், அதாவது கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்தார். மலபார் எனப்படும் கேரள, மகாராஷ்டிர கடற்கரை துவங்கி, கிழக்குக் கடற்கரையான ஆந்திர, சென்னை கடற்கரைவரை தேவனுடைய ஊழியத்தைச் செய்தார். கிறிஸ்து தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு அளித்த வல்லமையின்படியே அநேக அற்புதங்களைச் செய்தார்.

அங்கிருந்து பர்மா, வங்காளம் ஆகியவற்றிற்குச் சென்றுவிட்டு இறுதியாக சென்னையில் மயிலாப்பூர் கடற்கரையையொட்டி உபதேசித்துவந்தார். அவர் செய்த அதிசயங்களையும், உபதேசத்தையும் கண்ட பிராமண பூசாரிகள்

“ இவர் விக்கிரக ஆராதனைக்கு விரோதமானவர் ” என்பதால் முக்கூறுள்ள குத்தீட்டிகளால் அவரைக் குத்திக்கொன்றனர். சின்னமலை என்ற சென்னைப்பகுதியில், தான் நாட்டியிருந்த சிலுவையைக் கட்டிப்பிடித்தவாறு அவர் மரித்து, இந்தியாவிற்கு சுவிசேஷப் பேரொளியினை ஏற்றிவைத்தார். அவர் சிந்திய ரத்தத்திற்கு இந்தியர்கள் என்றென்றும் கர்த்தரிடத்தில் கணக்குஒப்புவிக்க வேண்டும். **சிந்தப்பட்ட அந்த ரத்தம் இந்தியர்களின் பாவத்தைக்குறித்து என்றென்றும் சாட்சி சொல்லும்.** சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அவரது பணிகளுக்கு நன்றிசொல்லவும் கடமைப்பட்டவர்கள்.

அன்றுமுதல் பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்கும் சுவிசேஷம் சென்றது. இந்த வரலாற்றை அறியாதவர்களும், மறந்தவர்களும், மடமையினால் மறுப்பவர்களும்தான் 1900 ஆண்டுகளுக்குப்பின்னர் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு கிறிஸ்தவ மதத்தை கொண்டுவந்தனர் என்று சொல்லுகிறார்கள்.

விரைவாக முஸ்லிம் மன்னர்களால் கைப்பற்றப்பட்டு, வரைமுறையின்றி அனுபவிக்கப்பட்ட இந்திய தேசங்கள், அவர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டிகளால், வியாபாரம் செய்யவந்த ஆங்கிலேயர் கைவசமாயிற்று. ஒருபுறம் இந்தியாவின் செல்வங்களை ஆங்கிலேயர் சுரண்டினாலும், அதுவரை இந்திய வரலாற்றில் காணப்படாத நீதித்துறை, நாடு முழுக ஒரே சட்டம், சாதிக்கேற்ற நீதி என்றில்லாமல் நாடுமுழுக ஒரே குற்றவியல் சட்டங்கள் ஒரே நிர்வாகமுறை, ரயில் போக்குவரத்து ஆகியவற்றை ஏற்படுத்தி இந்தியாவிற்குப் பலவகைகளில் முன்னேற்றத்தைக் கொண்டுவந்தனர்.

அதே காலத்தில் அரசியலோடு சம்பந்தப்படாத சேவையுள்ளம் நிறைந்த மிஷனரிகள், தங்கள் சொந்த நலனை வெறுத்து இந்தியாவிற்குச் சுவிசேஷப் பேரொளியைப் பரப்ப வந்தனர். இங்குள்ள ஆவிக்குரிய அறிவின்மை, கல்வியறியாமை, மருத்துவ வசதியின்மை ஆகியவற்றை உணர்ந்து, அரசாங்கம் சாராமல், தாமாகவே அன்பினால் ஏவப்பட்டு, பல சேவை நிறுவனங்களை அமைத்தனர். இவர்கள் அமைத்த கல்வி நிறுவனங்களே இந்தியாவில் கல்விக் கண்களைத்திறந்து, சாதி சமயமின்றி கற்றுக்கொள்ள வழிதிறந்தது. இச்சேவை நிறுவனங்களோ, ஆங்கில அரசாங்கமோ கிறிஸ்தவத்திற்கு மாறும்படி யாரையும் வற்புறுத்தவில்லை. இந்தியாவில் குருகுலக் கல்வி மூலம் மேல்ஜாதியினரும் வசதிபடைத்த அரச குடும்பத்தினரும் மட்டுமே கல்விபயின்ற நிலை மாறி **ஏழைகளான மற்றவர்களும் சமமாக அமர்ந்து கற்கும் நிலை** ஏற்பட்டது. அப்படியும் மேல்ஜாதியினர் முந்திக்கொண்டு நீதிபதிகளாகவும், காவல்துறை அதிகாரிகளாகவும் அரசுப்பணியில் சேர்ந்தனர். இவர்களில் எவருமே அரசாங்க வேலைக்காகவும் கல்வி கற்பதற்காகவும் கிறிஸ்தவராக மாறவில்லை. மதம் மாறினால்தான் கல்வியும், வேலையும் கிடைக்கும் என்று கிறிஸ்தவர்கள் ஒருபோதும் வற்புறுத்தியதில்லை. இன்று அவர்கள் தந்த கல்வியையும், சமத்துவத்தையும் அனுபவிக்கின்ற கொழுத்த மேல்வர்க்கத்தினர், நன்றியினை மறந்து, தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல், அறியாமையுள்ள பாமர மக்களைத் தூண்டிவிட்டு கிறிஸ்துவுக்கு எதிராக கிளம்பியிருக்கின்றனர். இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான் என்று கர்த்தர் சொன்ன சத்தியம் அவர்களை நியாயம் தீர்க்கும்.

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள்தான், தங்களையும் ஏற்றுக்கொள்ள ஒரு தெய்வமுண்டு என உணர்ந்து இயேசுவை ஏற்றுக்கொண்டனர். அவர்களின் ஏழ்மை நிலைகண்டு அவர்களை நேசித்த மிஷனரிகள் அவர்களுக்கு உணவுப்பொருட்களையும், மருத்துவ வசதிகளையும் இலவசமாக வழங்கினரேயன்றி அப்படி வழங்குவதற்காக அவர்களைக் கிறிஸ்தவர்களாக மாற வற்புறுத்தவோ, அவர்களுக்கு அரசாங்க வேலைகளை வழங்கிவிடவோ இல்லை. கிறிஸ்தவர்களாய் மாறியவர்களை சொந்த ஜாதியினர் பகைத்து ஒதுக்கியதால் அவர்களுக்கு அடைக்கலம் தருகிற மிஷன் காம்பவுண்டுகள் உருவாயின. மேல் ஜாதியினர் இயேசுவின் நற்செய்தியை அறிந்தும், தங்கள் ஜாதிமேன்மையை இழந்துபோவோம் என்று அஞ்சி சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவகிருபையைப் பெற்ற ஒருசிலர் மட்டும் அவர்களிலும் வேறுபட்டு தைரியமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொண்டனர்.

கிறிஸ்தவம் இந்தியாவிற்கு வந்ததால், அதன் மூலம் கல்விகற்ற அநேக சமூக சீர்திருத்தவாதிகள் தோன்றி, மக்களிடம் விழிப்புணர்வையும், எளியவர்களுக்கான சட்டப்பாதுகாப்பையும் ஏற்படுத்தினர். குறிப்பாக கணவனுக்குப் பின்னாலேயே உடன்கட்டை ஏறுவதுதான் கற்பு என்ற மிகக்கொடூரமான காட்டுமிராண்டித்தனத்தையும், நரபலி, சரீரத்தில் எலும்புகளுக்குள் ஆயுதங்களைப் பாய்ச்சிக்கொண்டு அதுதான் பக்தி என்பது போன்ற மடமைகள் நிறைந்திருந்தன. உலகளாவிய கல்விமுறையில் கற்ற நமது சீர்திருத்தவாதிகளும். மிஷனரிகளும் போராடியதால் ஆங்கில அரசாங்கம் சட்டமியற்றி இவற்றைத் தடுத்தது. அதன்

மூலம் ஆயிரமாயிரம் அப்பாவி மக்களும் பெண்களும் பாதுகாக்கப்பட்டனர். ஆயினும் இத்தனை ஆண்டுகள் சென்றும் மேற்படி மூடச்செயல்கள் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. அந்தச் செயல்களை சரியானதுதான் என சில படித்த மூடர்களும் இன்று கூறமுனைந்திருப்பதுதான் கொடுமையானது.

தெய்வபக்தி என்பது மனிதன் தன்னை உணர்ந்து, தன்வாழ்வைத் திருத்திக்கொண்டு வாழ்வதுதானேயன்றி, திருவிழாக்கள், முரட்டாட்டங்கள், சிந்தனையற்ற வழிபாடுகள் அல்ல என்பதை இன்றளவும் சிந்திக்கவிடாமல் தடைகள் வந்துகொண்டுதானிருக்கின்றன.

**<u>சுதந்திர இந்தியாவில் சுவிசேஷம் செல்வதற்குத் தடைகள் :-</u>** இந்திய மக்களிடம் சுவிசேஷம் செல்வதற்கு சில சிந்தனைகள் தடையாக உள்ளன. இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாததற்கு கீழ்க்கண்ட காரணங்கள் உள்ளன.

1) **<u>பாரம்பரியம்</u>** :- எங்கள் முன்னோர்கள் காலங்காலமாக வழிபட்டுவந்த தெய்வங்களை மாற்றிவிட்டு ஆங்கிலேயர்கள் பரப்பிய கிறிஸ்தவத்தை ஏற்பதா? என்பது பலரது கேள்வி.

காலங்காலமாக கைவிளக்கைப் பயன்படுத்திவந்த நமது முனனோர்களிடம் எண்ணையில்லாமல், புகையில்லாமல், ஏற்றுவதற்கு எளிதான, அதிக ஒளியுடைய மின்விளக்கைப்பற்றிக் கூறியிருந்தோமானால் அவர்கள் அதனைக் கற்பனை என்றுதான் சொல்லியிருப்பார்கள். தாமஸ்ஆல்வா எடிசன் என்ற அமெரிக்கர் கண்டுபிடித்த அந்த மின்விளக்கு நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நமது முன்னோர்கள் பயன்படுத்திய கைவிளக்கு ஓரம்கட்டப்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் மின்விளக்கின் பிரகாசமான ஒளியும், இதர வசதிகளுமே காரணம். இன்னமும் கைவிளக்கின் பெருமைகளைச் சொல்லிக்கொண்டு அதை விட்டுவிடமறுப்பவன் இருளில்தான் இருப்பான். இன்று நாம்பயன்படுத்தும் பெரும்பாலான பொருட்கள் அனைத்தும் வெளிநாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டவைகளே. அவற்றை ஏற்றுக்கொள்ளச் சொல்லி யாரும் நம்மை வற்புத்தவேண்டியதில்லை. நாமாகவே ஏற்றுக்கொள்கிறோம். அதாவது யார் கண்டுபிடித்தாலும், நல்லவைகளை நாம் ஏற்றுக்கொண்டு, நமது முன்னோர்கள் பயன்படுத்தியவைகளை விட்டுவிடத்தான் செய்கிறோம். ஆன்மீகத்திலோ குப்பைகளை, அவற்றிலுள்ள ஒருசில நல்ல சிந்தனைகளுக்காக விட்டுவிட மறுக்கிறோம். நன்றாகச் சிந்தித்துப்பாருங்கள். தெய்வ வணக்கம், பலவித வழிபாடுகள், திருவிழாக்கள், புனிதப் பயணங்கள், நீராடல்கள், நாமசங்கீர்த்தனங்கள், மூடபக்தி ஆகியவற்றை வலியுறுத்தும் தெயவங்கள் நல்லதா? அல்லது உன் வாழ்க்கையை எனது வெளிச்சத்தில் சீர்தூக்கிப்பார்த்து பாவங்களை விட்டுவிட்டு, புதிய வாழ்க்கை வாழத்துவங்கு என்பதை மட்டும் வலியுறுத்தும் நம்மைப்படைத்த தெய்வத்தின் வழி சிறந்ததா?

**உடன்பிறந்தே கொல்லும் வியாதிகளை விட்டுவிட்டு உடன்பிறவா மாமலையில் உள்ள மருந்தினை ஏற்றுக்கொள்வதே மதியுடமையல்லவா.**

**<u>2.தெய்வத்தைக்குறித்த அறிவின்மை</u>** :- இந்தியாவில் மக்கள் எதையும் வணங்கத் தயாராக உள்ளனர். மனிதர்களையும் கோயில்கட்டி வழிபடத் தயாராக உள்ளனர். தெய்வத்தைக்குறித்து அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்கத்தவறுகின்றனர்.

அ)இது சர்வவல்லமை உள்ளதுதானா? இதை வணங்கிக்கொண்டு, நான் தற்போது வாழும் வழியிலேயே வாழ்ந்தால் மோட்சம் கிடைத்துவிடுமா?

**ஆ)இந்த தெய்வம் எனது வாழ்வில் நான் அடுத்து என்னசெய்யவேணடும் எனக்கூறுகிறது?**

இ) எனது வாழ்வின் முடிவில் எனது ஆன்மாவிற்கு என்ன நடக்கும் என்று இந்த தெய்வம் தெளிவாகக் கூறுகிறதா? அல்லது இரண்டு மூன்றுவிதமாகச் சொல்லி குழப்புகிறதா?

ஈ) இந்த தெய்வம் பூமிக்கு வந்த வரலாறு என்ன, இதன் வரலாறு நிலையானதா அல்லது நினைத்த இடத்திலெல்லாம் கிளைக்கதைகளை சேர்க்க இயலுமா?

இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் அரசியல் தலைவர்களுக்கும், மறைந்த தலைவர்களுக்கும் கோயில்கட்டி வழிபடுபவர்கள், மேற்படி கேள்விகளைக் கேட்பதுடன், இத்தெய்வங்கள் சர்வசக்தி படைத்ததானால் ஏன் பலமுறை தங்கள் சொந்த வாழ்வில் தோல்விகளைச் சந்தித்தன, ஏன் அவர்களால் இன்னும் உயிரோடிருக்க முடியவில்லை என்றும் கேட்கவேண்டும். சாமியார்களை வழிபடுபவர்களும் இதனைக்கருத்தில் கொள்ள வேண்டும். நல்லுபதேசங்களைச் செய்வதாலும், மாயாஜால வித்தைகளைச் செய்வதாலும், மனிதர்களிடம்நல்லவன் என்று பெயர்வாங்கிவிடுவதாலும், யாரும் சர்வவல்லமையுள்ள தெய்வமாகிவிடமுடியாது. அவர்களுடைய பெயரைச் சொல்வதால் எவ்வித அதிசயமும் நிகழப்போவதில்லை.

சர்வ வல்லமை உள்ளவரும், எவருடைய நாமத்தினால் நோய்கள் குணமாகி, அதிசயங்கள் நடைபெறுகிறதோ அவரே தெய்வம். தாயும், தந்தையும், ஆசிரியரும், செய்யும் தொழிலும் மிகவும் மதிக்கப்படத்தக்கதேயன்றி, தெய்வங்களல்ல. அவர்கள் நினைத்தால் உங்கள் நோய்களைக் குணமாக்கி, உங்களுக்குக் கல்வி செல்வம் வீடுபேறு ஆகியவற்றைத் தரமுடியாது. எனவே தெய்வம் என்றால் என்ன என்பதை முதலாவாது யாவரும் உணரவேண்டும். இந்தியாவின் இழிநிலை என்னவென்றால் அனுதினமும் பாவத்தைச் செய்துவரும் அரசியல் தலைவர்களையும்கூட தனது சுயபிழைப்புக்காக தெய்வங்கள் என்று புகழ்ந்து அவர்கள் காலில் விழும் பெருங்கூட்டம் இங்குண்டு. என் தேசமே, நீ எப்போது விழித்துக்கொள்வாய்?

**3. பாவங்களை விட்டுவிட மனதில்லாதது** :- அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்ள மனதிருந்தும், அப்படி ஏற்றுக்கொண்டால், பாவ வழிகளை விடவேண்டியதிருக்கும், நமக்கு நஷ்டம்வரும் என்று கருதி ஏற்றுக்கொள்வதில்லை. இயேசுவிடம் பாவமன்னிப்பு என்பது பாவங்களை விட்டுவிடும்போது மட்டுமே கிடைக்கும் என்பதை அறிந்ததும் அநேகர் அவரை ஏற்றுக் கொள்வதில்லை. அதாவது இயேசுவை ஏற்றுக்கொண்ட நாள் முதல் லஞ்சம் வாங்குகிறவன் லஞ்சம் வாங்க் கூடாது. குடிக்கிறவன் குடிக்கக் கூடாது. பல பெண்களை நாடுகிறவன் அவர்களை மறந்துவிடவேண்டும் என்று அறிந்ததும், அவற்றை விட்டுவிட மனதில்லாமல் இயேசுவை விட்டுவிடுகிறார்கள். அவர்கள் விரும்புவதெல்லாம் பாவங்களையும் அக்கிரமங்களையும் தொடர்ந்து செய்துகொண்டே, சாமிக்கு ஏதாவது செய்து, சாமியின் அருளைப் பெற்றுவிட வேண்டும். அவர்கள் எதிர்பார்க்கும் அந்த அருள் என்பது இகவாழ்வின் வளங்கள்தான். பாவமன்னிப்பு, பரலோகம் ஆகியவையெல்லாம் கண்ணுக்குத் தெரியாதவைகளாதலால் அவற்றைப் பெற்றுக்கொள்ள எந்த முயற்சியும் அவர்கள் எடுப்பதில்லை, வேறெந்தச் சாமியும் அப்படி வாக்குப்பண்ணவுமில்லை.

ஒருவர் என்னிடம் தினசரி என்னால் குடிக்காமல் இருக்க முடியாது, சில பெண்களுடன் உள்ள தொடர்பை விடமுடியாது, ஆனால் நான் இயேசுவை நம்புகிறேன், என் அக்கிரமங்களை அவர் மன்னிப்பாரா என்றார். நிச்சயமாக மன்னிக்கமாட்டார். ஏனெனில் தன் பாவங்களை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவன்தான் இரக்கம் பெறுவான் என்று பரிசுத்த வேதாகமம் திட்டவட்டமாகக் கூறகிறது என்றேன். அப்படியானால் அந்தச்சாமிஎனக்குத் தேவையில்லை என்று போய்விட்டார். ஒருவர் என்னிடம் நான் இயேசுவை ஏற்றுக்கொண்டால் தினசரி எனக்குவரும் ஆயிர ரூபாய் லஞ்சத்தை இழக்கவேண்டியதிருக்கும், அதை இந்த இயேசு சாமி உடனே தருவாரா என்றார். ஒன்று அநீதியான பணத்தை விட்டுவிடுங்கள், அல்லது பரலோகத்தை விட்டுவிடுங்கள் என்றேன். இன்றும் அநேக பணக்காரர்கள் பல தானதருமங்களைச்செய்து, கோயில்கள் கட்டி, பூஜைகள் செய்து தங்கள் தினசரி பாவங்களை மட்டும் விட்டுவிடாமல் சாமியிடம் அருள்பெற நினைக்கிறார்கள்.

<u>நாம் எப்படி சுவிசேஷம் அறிவிப்பது?</u>

சுவிசேஷம் அறிவிப்பது இயேசுவை அறிந்தவர்களின் கடமை என்று அறிந்தோம். முழு நேர ஊழியர்கள் தவிர மற்ற விசுவாசிகளும் கீழ்கண்ட முறைகளில் சுவிசேஷத்தைச் சொல்ல முடியும்.

1)நமக்கு அருகில் உள்ளவர்களிடம் நட்பு முறையில் பேசும்போது உலகம் அரசியல், சினிமா என்று பேசாமல், ஆன்மா, பாவம், பாவநிவிர்த்தி, மரணத்திற்குப்பின்னுள்ள வாழ்வு, மனந்திரும்புதல் ஆகியவற்றைப் பேசலாம். இவற்றைப்பற்றி அடிக்கடி பேசுவதால் “போரடிப்பவன்”, “தீவிர மதவாதி” என்றெல்லாம் பேசுவார்கள். எனது சொந்த வாழ்வில் இப்படிப் பலமுறை நான் கேட்டாலும் அதையும் பொருட்படுத்தாமல் அவ்வப்போது அவர்கள் சிந்தனையைத் தூண்டும் சில முக்கிய கேள்விகளை மட்டும் கேட்டுவைப்பேன்.

உதாரணமாக ஒரு பெரும் அரசியல்வாதியின்மீது விசாரணைக் கமிஷன் வைத்து, அவரை சிறையில் தள்ளியதைப்பற்றி பேச்சு எழுந்தது. “மனிதன் ஏன் லஞ்சம் வாங்குகிறான்? வறுமையினாலா, ஆசையினாலா, நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியத்தினாலா” என்று கேட்டேன். வாங்கிய லஞ்சப்பணத்தை என்ன செய்கிறான்? அதன் முடிவுதான் என்ன? அதில் கிடைக்கும் ஆனந்தம் நிலையானதா? என்றெல்லாம் சில சிந்தனையைத் தூண்டும் கேள்விகளைக் கேட்டு, அதற்கு அவர்கள் பதில் தெரியாமல் என்னிடமே கேட்கும்போது படிப்படியாக இயேசுவைப்பற்றி சொல்வேன். பெரும்பாலும் அவர்கள் அதை விரும்புவதில்லை. ஆனால் சத்தியம் அவர்கள் காதுகளில் தொனித்துக்கொண்டேயிருக்கும். அவர்கள் சத்தியத்தை அறிகிறார்கள். தேவகிருபை கிடைக்கும்போது அவர்களும் அவரிடத்தில் திரும்புவார்கள்.

2)எப்படிப்பட்ட அயோக்கியனும் தன்னைக் குற்றம் சொல்வதை வெறுப்பான். எனவே மற்றவர்களின் அக்கிரமநகளையும், தவறான வழிபாடுகளையும், நம்பிக்கைகளையும் நாம் குற்றம் சொல்லாமல், பொதுவான கேள்விகள் மூலம் அவர்களாகவே அதனை

உணரச்செய்யலாம். ஒளியை ஏற்றினால் இருள் தானாக விலகும். இப்பாடத்தில் கூறப்பட்டுள்ளதெல்லாம் உண்மையான வரலாறும், பொதுவாக உங்கள் சிந்தனைக்குக் கொண்டுவரும் விஷயங்களுமேயன்றி, எந்தக் குறிப்பிட்ட சாமி பெயரையும் குறிப்பிட்டுத் தாக்குவதற்கு அல்ல.

3)ஊழியம் செய்பவர்களுக்கு உதவுங்கள். முடிந்த அளவு அவர்களோடு உழைக்கலாம். ஊழியங்களுக்குப் பொருளுதவி செய்யும்போது, உண்மையாகவே சுவிஷேம் அறிவிக்கிறவர்களுக்கு உதவுங்கள். ஜனரஞ்சகமாக இருப்பவர்களுக்கே பணம் அனுப்பி அவர்களைக் கெடுக்காதீர்கள்.

4)உங்கள் சொந்த வாழ்க்கை இயேசுகிறிஸ்துவினால் புதிதாக மாறியிருப்பதைக்கண்டு அநேகர் மனம் மாறவேண்டும். அதாவது சாட்சியான வாழ்க்கை மூலம் அநேகரை மாற்றுங்கள். உங்கள் உண்மையும், தெளிவும், சொல்லும், செயலும் அநேகரை தேவனிடத்திற்கு வழிநடத்த தேவன் கிருபை செய்வாராக!

**கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்.**

1) **நாம் ஏன் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்?**
2) **இந்தியாவிற்கு ஆங்கிலேயர்கள்தான் கிறிஸ்துவ மதத்தைக் கொண்டுவந்தனர் என்று கூறுபவர்களுக்கு நாம் தெரிவிக்க வேண்டிய உண்மையான பதில் என்ன?**
3) **இந்தியாவில் சுவிசேஷத்திற்குத் தடையாகக் காணப்படும் பல அம்சங்களில் எது முதன்மையானது?**
4) **நாம் எப்படியெல்லாம் சுவிசேஷப்பணியில் ஈடுபடலாம் என்று இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.